Reporting Sec.

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

NINTH SESSION OF THE THIRD LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

Monday, the 1st August 1966.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past ten of the clock. Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

லாலா லஜபதிராய் நிதி

* 1. கேள்வி.—திரு. அ. ப. அழகமுத்து : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) திருச்சி மாவட்டம் முசிறி டிவிஷனிலுள்ள பஞ்சாயத்து யூனியன்களில் லாலா லஜபதிராய் நிதி வசூலிக்கப்பட்டதா ?

(இ) ஆமெனில், ஒவ்வொரு யூனியனிலும் எவ்வளவு பணம் வசூலிக்கப்பட்டது ?

(உ) அந்தப் பணம் எவ்வெப்போது நிதிக் கமிட்டிக்கு அனுப்பி வைக்கப்பட்டது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) ஆம்.

(இ) ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் வசூலித்த தொகை வருமாறு :—

		ரூ.
(1)	தொட்டியம்	300
(2)	தாத்தையங்கார்பேட்டை	500
(3)	துறையூர்	1,000
(4)	உப்பிலியாபுரம்	1,000
(5)	முசிறி	520
(6)	மணச்சநல்லூர்	650
(7)	புள்ளம்பாடி	510
(8)	லால்குடி	85
	மொத்தம்	4,565

(உ) திருச்சிராப்பள்ளியில் முசிறிக் கோட்டத்திலும், பிற கோட்டங்களிலும் வசூலித்த தொகை முதற்கண் திருச்சிராப்பள்ளி இந்திய ஸ்டேட் பாங்கியில் அவ்வப்பொழுது வைப்பீடு செய்து

வைக்கப்பட்டது. மாவட்டத்தில் வசூலான மொத்தத் தொகையும் பிறகு 1965-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் மாநில குழுவுக்கு மாற்றப்பட்டது.

திரு. து. ப. அழகமுத்து: தலைவர் அவர்களே, இந்த நிதி வசூலிக்கப்பட்டு காலந்தாழ்ந்து கொடுக்கப்பட்டது என்ற புகார் சர்க்காருக்கு வந்ததா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவ்வாறு புகார் ஒன்றும் வரவில்லை.

திரு. எம். எஸ். மணி: இந்த நிதி வசூலில் தனியார் சிலர் வசூல் செய்து மோசடி செய்திருப்பதாக அரசாங்கத்திற்கு புகார் ஏதாவது வந்ததா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதுவரையிலும் அரசாங்கத்திற்கு அவ்வாறு புகார் ஒன்றும் வரவில்லை.

புலவர் கா. கோவிந்தன்: தலைவர் அவர்களே, லாலா லஜபதி ராய், நேரு போன்ற தலைவர்களுக்கு நிதி வசூல் செய்வது தேசியத் தொண்டர்கள் செய்யலாம். ஆனால், இந்த வேலையை அரசாங்கத் தரப்பிலே கொடுப்பதால் அதிகாரிகளிடம் பெர்மிட், வேறு ஏதாவது வாங்க வந்தால் அதற்கு ஒரு 10 ரூபாய் கொடுத்தால் தான் பெர்மிட் கொடுக்கப்படும் என்று சொல்லப்படுகிறதே அந்த முறையைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பணத்திற்குப் பொறுப்பு எடுத்துக்கொள்ளும் வகையில் அதிகாரிகளுக்கு பொறுப்பு அளிக்கப்படுகிறது. எவ்விதத்திலும் கட்டாயப்படுத்தக் கூடாதென்று கலெக்டருக்கும், மற்ற அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. யாராவது கட்டாயப்படுத்தினர் என்று தகவல் கொடுத்தால் அதற்குமேல் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: திருச்சி ஜில்லாவில் வசூலிக்கப்பட்ட தொகை, தேதி என்ன? மாநிலக்குழுவிற்கு சமர்ப்பித்தத் தொகை, தேதி என்ன என்ற விவரம் அறியலாமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: 28—1—66 வரை தொகை வசூலிக்கப்பட்டது. தொகையின் விவரத்தை நான் கூறினேன். அதிகாரிகள் அவ்வப்போது அவர்கள் கணக்கிலே ஸ்டேட் பாங்கிலே போடுவது என்று வைத்திருக்கிறார்கள். வசூல் முடிந்த பிறகு இது மாநில கமிட்டிக்கு மாற்றப்பட்டது.

திரு. ஜே. மாதா கவுடர்: லாலா லஜபதிராய் நிதி மாநிலம் முழுவதிலும் வசூலித்தது எவ்வளவு என்று அறிய முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எல்லாம் சேர்ந்து ரூ. 1½ லட்சத்தி சில்லரை இருக்கும்.

1st August 1966]

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அரசாங்க அதிகாரிகள் கட்டாயப்படுத்தி நிதி வாங்கமாட்டார், வாங்கவும் கூடாது, அப்படி வாங்கினால், அந்தத் தகவலை அமைச்சருக்குத் தெரிவித்தால் பரிசிலனை செய்வார்கள் என்று சொன்னார்கள். மாவட்ட ரீதியில் ஒவ்வொரு அதிகாரிக்கும் இவ்வளவு வசூல் செய்யவேண்டுமென்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதை எப்படி வசூல் செய்வது என்று என்னைப் போன்றவர்களைப் பார்த்து கேட்கிறார்கள். நான் என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. இதற்கு என்னதான் பரிகாரம் காணப்போகிறார்கள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : குறைந்தபட்சம் இவ்வளவு வசூல் செய்யவேண்டுமென்று அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்படவில்லை.

திரு. கி. இரா. சம்பந்தம் : தலைவர் அவர்களே, இந்த நிதி வசூலிக்கப்படுவது எதற்காக ? என்ன காரணத்திற்காக வசூலிக்கப்படுகிறது என்ற விஷயத்தைப்பற்றி சொல்லுவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : லாலா லஜபதிராய் ஒரு சிறந்த தேசத் தலைவர். நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும், நாட்டை பலப்படுத்துவதற்கும் இளைஞர்களுக்கு அவர் வழிகாட்டினார். அவர்களுடைய லட்சியத்தை நிறைவேற்றக்கூடிய வகையில்தான் நிதி பயன்படுத்தப்படும். இப்பொழுது உள்ள இளைஞர்கள் லாலா லஜபதிராயைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த நிதி வசூலிக்கப்பட்டது. இந்தக் கமிட்டி இதை எவ்வாறு பயன்படுத்தவேண்டும் என்பதைப்பற்றி ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, மூலக்கேள்வியில் முசிறி டிவிஷனிலுள்ள பஞ்சாயத்து யூனியன்களில் வசூலிக்கப்பட்டதா என்று கேட்கப்பட்டிருக்கிறது. அப்படியென்றால் யூனியனிலிருந்து ஏதாவது வசூல் செய்யப்பட்டதா ? எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : யூனியனில் கொடுத்ததுதான் நான் சொன்னது.

'*God-father Scheme*'

*2 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the "God-father Scheme" sponsored in September 1963, has since been suspended; and

(*b*) if so, the reasons therefor?